**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 135 /2013

நாள்: 26.11.2025

பெயர்: ராஜலெட்சுமி (வா.சா.2) க/பெ: ஆனந்த்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>**

1. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை நானும் எனது அண்ணனும் எப்போது ஒன்றாக இருந்தோம் என்றால் 2012 வரை இருந்தோம் என நினைக்கிறேன். எனது அண்ணனுக்கும் எனது அம்மா, அப்பா மற்றும் எனது சகோதரிகளுக்கும் இடையே எபப்போது விரோதம் ஏற்பட்டது என்றால் அவருக்கு திருமணம் ஆகி அவர் மனைவி மற்றும் மாமியார் பேச்சை கேட்டு எங்களிடம் பிரச்சினை செய்ததிலிருந்து ஆரம்பித்தது. எனது அண்ணன் வெளிநாட்டிலிருந்து வந்து எத்தனை ஆண்டு கழித்து திருமணம் செய்து கொண்டார் என்றால் அது எனக்கு நினைவில் இல்லை. எனக்கு பிச்சனூர் சவுந்தராஜன் தலையாரியை தெரியுமா என்றால் தெரியாது. எனது அண்ணன் வெளிநாட்டிலிருந்து வந்ததும் எனக்கு சவுந்தராஜன் தலையாரியை இரண்டாவது திருமணம் செய்து வைப்பதற்கு எனது வீட்டில் ஏற்பாடு செய்ததால் அதை அவர் தடுக்க முயன்ற போது எங்களுக்கும் எனது அண்ணனுக்கும் பிரச்சினை ஏற்பட்டது என்றால் அப்படி ஒரு சம்பவம் ஏற்படவில்லை.

2. இந்த கேள்விக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என சாட்சி கூறுகிறார். சவுந்தராஜன் மனைவி வீட்டிற்கு வந்து எனது அண்ணன் குமாரிடம் 2வது திருமணத்தை பற்றி கூறி அழுததால் அதை கேட்டதால் எனது அண்ணனுக்கும் எங்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டதா என்று சொன்னால் அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை. அது ஒரு கட்டுகதை. இந்த வழக்கு சொத்து பொறுத்து இது நாள் வரை பிளாட் அப்ரூவல் பெறப்பட்டதா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அப்பாவிற்கு தான் தெரியும். எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பிராதில் மற்றும் முதல் விசாரணை

அபிடவிட்டிலும் இரண்டு முறை ஒப்பந்தம் போடபடும்போது பிளாட் அப்ரூவல் பெறப்பெட்ட பின்னர் கிரையம் ஏற்படுத்த முடியும் என்று குறிப்பிட்டுள்ளனா என்றால் வழக்கு தாக்கல் செய்த எனது அப்பா அவர் தாக்கல் செய்த பிராதை தழுவி எனது முதல் விசாரணை அபிடவிட்டில் குறிப்பிட்டுள்ளேன். குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு இடையே உள்ள காலகட்டத்தில் நான் தாக்கல் செய்த ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். ஆனால் அதில் உள்ள சங்கதிகள் முழுவதுமாக ஞாபகத்தில் இல்லை.

3. பிளாட் அப்ரூவல் இல்லாமல் கிரையத்தை பதிவு செய்யமுடியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் பிளாட் அப்ரூவல் பெறமால் பதிவு செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு தான் தெரியும். தாவா சொத்து பிரதிவாதி குமார் 10.02.2011ல் பிளான் அப்ரூவல் வாங்கியுள்ளாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வழக்கு சொத்து குறித்து பிரதிவாதி பெயரில் கிரையம் வாங்கியதால் தான் பிளான் அப்ரூவல் பெறப்பட்டு 09.02.2014 ஆண்டுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கவேண்டும் என நிபந்தனையோடு கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு தான் தெரியும். பிளான் அப்ரூவல் இல்லாமல் வீடு கட்டி மின்இணைப்பு, ரசீதுகள் பெறமுடியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்து பிரதிவாதி குமாருக்கு உரியது என்பதால் 10.02.2011ல் பிளான் அப்ரூவல் வாங்கி அதில் கட்டிடம் கட்டி மின்இணைப்பு, குடிநீர் இணைப்பு பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

4. அது எனது அப்பா அவரது வருமானத்தில் 1ம் பிரதிவாதி பெயரில் வாங்கியது. எனது அப்பா டீ கடை வைத்ததற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது அப்பா டீ கடையில் ஒரு நாள் எவ்வளவு வருமானம் வந்தது என்றால் எனக்கு தெரியாது. (சாட்சி தாமாக முன்வந்து அப்போது ஜெயங்கொண்டத்தில் 2, 3 டீ கடைகள் தான் இருந்தது. அதனால் SBI வங்கி, பாத்திமா பள்ளிகளில் எனது அப்பா தான் டீ சப்ளை செய்து வந்தார். நல்லா வருமானம் வந்தது.) டீ கடை வைத்ததற்கு லைசன்ஸ் எனது அப்பா

வாங்கியிருந்தாரா என்றால் வாங்கியிருப்பார். அவ்வாறு எனது அப்பா டீ கடை நடத்தவில்லை என்றும் எந்த லைசன்ஸ் பெறவில்லை என்றும் அனைத்து 1ம் பிரதிவாதி வெளிநாட்டுக்கு சம்பாதித்த வருமானத்தின் மூலமாக எனக்கும் எனது மூத்த சகோதரி மற்றும் இளைய சகோதரிக்கும் படிக்க மற்றம் திருமணம் செய்த வைத்தார் என்று சொன்னால் சரியல்ல.

5. எனது அப்பாதான் அவரது வருமானத்தில் அனைத்தும் செய்து வைத்தார். 1ம் பிரதிவாதி குமார் மைனராக இருக்கும் போது அவரது தாயாரை கார்டியனாக வைத்து பெரியம்மா மற்றும் பாட்டி கொடுத்த பணத்தில் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. எனது அப்பாதான் 1ம் பிரதிவாதி பெயரில் அவரது சொந்த வருமானத்தில் வாங்கியது. எங்களது தவறுகளான செயல்களை 1ம் பிரதிவாதி கண்டித்ததால் நான் எனது அப்பாவை தூண்டிவிட்டு வழக்கு தாக்கல் செய்ய வைத்தோம் என்றும் எனது அப்பாவிற்கு 1ம் பிரதிவாதி மேல் வழக்கு தொடுப்பதற்கு எண்ணமே இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு உரிமை மற்றும் பாத்தியப்பட்டது என்றும் அதன் பேரில் எனது அப்பாவிற்கு உயில் எழுதி வைப்பதற்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஒரு ஆவணத்தில் பிழைத்திருத்தம் செய்யும் போது அது குறித்து கடைசி பக்கத்தில் குறிப்பு எழுதுவது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கபடும் **வா.சா.ஆ.1ல்** 2ம் பக்கத்தில் 4வது வரியில் அடித்து திருத்தம் செய்துள்ளதா என்றால் உள்ளது. ஆனால் அது பற்றின குறிப்பு இல்லை. அது எனது அப்பாவிற்கு தான் தெரியும்.

6. நான் தாக்கல் **வா.சா.ஆ.2ல்** 2ம் பக்கத்தில் 6ம் வரியில் இடைசருக்கல் ஏற்பட்டுள்ளதா என்றால் ஏற்பட்டுள்ளது. எனக்கு **வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2** ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு தான் தெரியும். அதில் உள்ள சங்கதிகள் குறித்து முழுவதுமாக எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள **வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4ல்** உள்ளது எனது அப்பாவின் கையெழுத்து இல்லை என்றும் மாறுபட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. **வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2** உள்ள கையெழுத்து எனது

அப்பாவுடையதா என்றால் அப்பாவுடையதுதான். **வா.சா.ஆ.4ல்** உள்ளது எனது அப்பாவின் கையெழுத்தா என்றால் எனது அப்பாவின் கையெழுத்து தான் . அது குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. 2 நாட்கள் கழித்து எனது தந்தை கூறினார் அப்போதுதான் எனக்கு தெரியும். **வா.சா.ஆ.3ஐ** பிரதிவாதியும் எனது தாயாரும் ஒன்றாக இருக்கும் போது அவருக்கு தெரியாமல் நாங்கள் எடுத்து வந்து எங்கள் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் எனது அப்பாவிடம் இருந்தது. அதனால் அவர் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்தார். தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் பிரதிவாதி கேட்ட எதிரிடை கோரிக்கை பரிகாரம் படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/– ராஜலெட்சுமி
திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/– S. தனலெட்சுமி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
**ஜெயங்கொண்டம்.**